தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2014 சிலை-10 (25-12-1983) விலை 0-65 காசு இதழ் எண் : 29 பகுதி 1

பேச்சுரையால் தமிழீழம் பிறப்பதில்லை! பிறந்துவிட்ட உரிமையெண்ணம் சாவதில்லை!

பேச்சுரையால் தமிழீழம்
பிறப்ப தில்லை!
பிறந்துவிட்ட உரிமையெண்ணம்
சாவ தில்லை!
மூச்செல்லாம் விடுதலைக்கே!
முயற்சி யாவும்
முழுவுரிமை பெறுவதற்கே!
முனைந்தோர் கையின்
வீச்செல்லாம் பகைப்புலத்தை
வீழ்த்து தற்கே!
வினைவெல்லாம் தமிழீழம்
சமைப்ப தற்கே!
ஏச்செல்லாம் இழிவெல்லாம்
உரமே ஆகும்!
இளைஞர்படை எழுந்துவிட்டால்
கொடுமை சாகும்!

பதவியெல்லாம் – நாற்காலி
நலன்கள் எல்லாம் –
பாய்ந்துவரும் எழுச்சிக்குத்
துணையும் ஆமோ!
உதவியெல்லாம் உரிமையினை
மீட்டி டாது!
உயிர்மீட்டும் விடுதலைக்கே
உரஞ்சேர்க் காது!
பொதுவான நடைமுறைகள்
உணர்வை வீழ்த்தும்!
பொய்ச்சலுகை, தூதுரைகள்
காலந் தாழ்த்தும்!
மெதுவான போக்குகளைத்
தவிர்த்தல் வேண்டும்!
மெத்தனங்கள் சூழ்ச்சிக்குக்
கைத்தா ளங்கள்!

உலகமென்னும் உருண்டைக்குள்
தமிழர்க் காக
உரிமையுள்ள ஒருநாடு
தோன்றல் வேண்டும்!
கலகத்தால் இனமழிந்து
சாகும் முன்னம் –
கயவரெல்லாம்தமிழ்க்குலத்தை
அழிக்கும்முன்னம் –
பலகற்ற சூழ்ச்சியினால் –
அதிகா ரத்தால் –
பைந்தமிழர் நைந்தழிந்தே
ஒழியு முன்னம்
விலகட்டும் பகை! உரிமைக்
கதிர்தோன் றட்டும்!
விடிபட்டும் தமிழீழம்!
விளங்கட் டும்மே!

விடுதலைக்கே தோள்கொடுக்கும்
இளைஞ ரெல்லாம்!
வேற்றுமைகள் மறந்தொருங்கே
அணிசே ரட்டும்!
கெடுதலைக்குக் குழிவெட்டி
மண்மூ டட்டும்!
கிழனுப்பு வேலைகட்குத்
திரைக் கட்டும்!
அடுதலைப்பைத் தொடங்கட்டும்!
படைசூ ழட்டும்!
ஆர்ப்பரிப்பு வானத்தைக்
கிழித்தே கட்டும்!
படுதலையில் காலிடறப்
பகைபோ டட்டும்!
பதவிநலம் நாடுபவர்
உளஞ்சா கட்டும்!

மொழி,இனப் போராட்டங்கள்!

தமிழகப் போராட்டத்திற்கு உலக வரலாற்றில் எடுத்துக் காட்டாக இருப்பவை இரண்டு நாட்டு வரலாறுகள்;

1. மொழியடிமை நீக்கத்திற்காகவே போராடி விடுதலை பெற்ற நாடு :

அயர்லாந்து : இது பிரிட்டனின் ஒரு பகுதி நாடாக இருந்தது. பிரிட்டிச பாராளுமன்றத்தில் அயர்லாந்துக்கு 40 உறுப்பாண்மைகளே இருந்தன. அதன் உரிமைக்குப் பாடுபட்டவர் டிவலரா என்னும் தலைவர்.

இந்நாட்டு மக்கள் தொகை 30 இலக்கம். அது பிரிட்டனுடன் இணைந்திருந்த காலத்தில் அவர்களின் ஐரிசுமொழி சிறுகியிருந்தது. அயர்லாந்துக் காரர்களே கூட அந்தமொழியில் பேச வெட்கப்படும் நிலையில் அம்மொழி இருந்தது. ஐரிசுமொழி அழிந்து விடுமோ என்று அஞ்சினர், அம்மக்கள். ஆனால் அயர்லாந்துக் காரர்கள் கிளர்ச்சி செய்து தன்னுரிமை பெற்றவுடன், அயர்லாந்து அரசு, தாய் மொழியான ஐரிசுமொழியை அரசு மொழியாக்கியது. சட்டங்கள் அந்தமொழியில் இயற்றப் பெற்றன. பின்னர் படிப்படியாக அந்த மொழிக்கு உயர்வு ஏற்பட்டது.

2. இனஅடிமை நீக்கத்திற்காகவே போராடி விடுதலை பெற்ற நாடு :

இசுரேல் : இசுரேலியமக்கள் (யூதர்கள்). அவர்கள் செருமனி, இங்கிலாந்து, ஆத்திரியா முதலிய நாடுகளில் சிறுபான்மையினராகச் சிதறியிருந்தார்கள். அவ்வாறு இருந்ததால் எல்லா நாடுகளில் உள்ள மக்களும் அவர்களைத் துன்புறுத்தினார்கள். பின்பு அடித்து விரட்டினார்கள். கடைசியில் உலகம் முழுவதும் சிதறிக் கிடந்த யூதர்கள் 8 இலக்கம் பேரும் (அப்பொழுதைய கணக்குப்படி) 1948-ஆம் ஆண்டு சுமேரியா பாலைநிலத்தில் ஒன்று சேர்ந்து 'இசுரேல்' என்னும் ஒரு தனி உரிமை நாட்டை அவர்களுக்கென்று அமைத்தார்கள். உரிமை நாட்டை அவர்கள் வளமாக்கினார்கள். இக்கால் அங்கு 17 இலக்கம் பேர்கள் வாழ்கின்றனர். அவர்கள் நாடும் உலகில் உள்ள உரிமை நாடுகளில் ஒன்றென இக்கால் மதிக்கப் பெறுகின்றது.

இம்மாதத் தென்மொழி (சுவடி20ஓலை1-2) ஆசிரியவுரையைப் படிக்கத் தவறாதீர்கள்! அதில் ஓர் இருட்டு வெளிச்சமாகிறது!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய எழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

Scanned with CamScanner

தொடர்ச்சி-4 நாள்வரிசைச் செயல் விளக்கம்!

பாவலரேறுவின் முதல் ஐரோப்பியச் சுற்றுச்செலவு

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
130)	5-10-83	இரவு 8 மணி முடிவு 10.30	South Hall விசுவநாதன் வீட்டில் த.வி.ம.க. அன்பர்கள் கூட்டம்.
131)	”		இரவு சீனிவாசன் வீட்டில் தங்கல்.
132)	6-10-83	முற்பகல் 10 பிற்பகல் 4 வரை	இலண்டன் நகரிலுள்ள ஏர்பிரான்சு முகவரிடம் சென்று 12-10-83-இல் தமிழகம் திரும்ப வானூர்திச் சீட்டுப் பதிவு முயற்சி. பொத்தகக் கடை சென்று நூல்கள் வாங்குதல்!
133)	”	இரவு 9 முதல் இரவு 12.30 வரை	இலண்டன் சீனிவாசன் வீட்டில் தமிழீழம் பற்றிப் பெரியவர்கள் சிலருடன் கலந்துரையாடல் (இராச சுந்தரம் தலைவரும் கலந்து கொண்டார்) இரவு உணவுக்குப் பின் ஓய்வு 1.30 மணி
134)	7-10-83	காலை	பிரான்சில் உள்ள அரிமா, செருமனி மணிசேகரன் இவர்களுடன் தொலைபேசித் தொடர்பு பிரான்சு நிகழ்ச்சிகள், தமிழகம் திரும்புதல் தொடர்பாக)
135)	7-10-83	காலை 9 முதல் மாலை 5 வரை	மீண்டும் சீனிவாசன் அலியர் இராசா இருவருடனும் A:F முகவரிடம் சென்று சீட்டுப் பதிந்து வாங்கிவருதல்
136)	”	7-30-9.30	இலண்டன் WestEnd பகுதியில் உள்ள பாரதி வித்தியாலயாவில் த.ம.வி.க. கூட்டம்.
137)	”	இரவு 10-11 வரை	Wimbledon மாரியம்மன் கோயிலில் பேச்சு; சதானந்தம் மகள் பிறந்தநாள் விழாவும்.
138)	”	இரவு	சீனிவாசன் வீட்டில் உணவும் ஓய்வும்.
139	8-10-83	காலை 6	இலண்டனிலிருந்து வானூர்தி வழி பாரிசு புறப்பாடு: (Air France)
			பாரீசில் இறுதி நிகழ்ச்சிகள்
140)	”	காலை 8	பாரிசு வானூர்தி நிலையம் சேர்தல் அன்பர்கள் வரவேற்பு.
141)		காலை 11 00	அரிமா வீடடைதல்.
142)	”	மாலை 7 8-45	பாரீசில் பெரியார் மலர் வெளியீட்டுவிழாவும் திரு. வி.க. நூற்றாண்டு நினைவு விழாவும் பேச்சு.
143)	8-10-83	இரவு 10. 0	இரவு ஓய்வு. அரிமா வீட்டில.
144)	9-10-83	பிற்பகல் 2மணி	முற்பகல் ஓய்வு. ஞானம் வீட்டில் உணவு.
145)	”	மாலை 5 முதல் 8.30 வரை	தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முத்திரைவெளியீட்டுவிழா (வைகுந்தவாசனும் கலந்து கொண்டார்)
146)	”	இரவு 11	இரவு தங்கல் அரிமா வீடு.
147)	10-10-83	பகல் 2 30மணி	தமிழீழ விடுதலைப் பேரவை அலுவலகத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சி
148)	”	மாலை 5 முதல் இரவு 7.30வரை	கடைத்தெருவில் செழியன் சோசபு, அரிமா இவர்களுடன் சில பொருள்கள் வாங்குதல்.
149)	”	இரவு 12	செழியன் வீட்டில் வழியனுப்பு விருந்து.
150)	11-10-80	முற்பகல் பகல் 1 முதல் பிற்பகல் 3 வரை	தமிழகம் புறப்பட ஏற்பாடு-அரிமா வீட்டில். வில் பிரான்சுடன் தமிழக விடுதலை, தமிழீழ விடுதலை, தென்மொழி, தமிழ்நிலம், அச்சக வளர்ச்சி முதலியவை பற்றி இரண்டு மணி நேரம் கலந்துரையாடல். அரிமாவும் உடனிருந்தார்.

(தொடரும்)

தொடர்-4

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

4. பாரீசு நிகழ்ச்சிகள்

கப்பலிலிருந்து இறங்கியவுடனேயே பொற்செழியன் அரிமாவிற்குத் தொலைபேசி வழியாக எங்கள் வரவையும் நேரத்தையும் தெரிவித்திருந்தார். எனவே வண்டி, செரிகுடியிருப்பில் நுழையும்போது, வண்டி நிறுத்தும் இடத்தில் திரு அரிமா வளங்கோ நின்றிருந்தார். வண்டி போய் நின்றவுடன் நான் இறங்கினேன். அரிமா ஓடிவந்து என்னை மூச்சு முட்டக் கட்டித் தழுவிக் கொண்டு முத்தமழை பொழிந்தார்; கண்ணீர் வடித்தார். ஐயா, ஐயா, ஐயா, என்று ஆர்வம் மேலிட உணர்வு வயப்பட்டு, நீண்டநாள் பிரிந்திருந்த தாயைக் கண்ட தலைமகன் பாசத்தைப் பொழிவதுபோல் பொழிந்தார். நானும் அவர் அன்புணர்வுக்குள் கட்டுப்பட்டு அவரை இறுகத் தழுவி நெற்றியிலும் கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டேன். எங்களைப் பார்த்துச் செழியனும், தம்பிகள் இராசேந்திரனும் வளவரசும் வியந்து வெறிக்கப் பார்த்து மகிழ்வும் வியப்பும் பொங்க நின்றிருந்தனர்.

தம்பி அரிமா வளங்கோவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லியாதல் வேண்டும். தென்மொழி கடலூரில் நடந்து கொண்டிருந்த பொழுது, புதுவையில் இருந்துகொண்டு, இதழ் வளர்ச்சிக்கும் இயக்க விரிவிற்கும் மிக ஆக்கமாகவும் ஊக்கமாகவும் இருந்தவர் திரு.அரிமா. ஏறத்தாழ 20 ஆண்டுத் தொடர்பு அவருக்கும் தென்மொழிக்கும் உண்டு. அவர் அக்கால் புதுவை அரசில் பொதுப்பணித் துறையில் ஓர் எழுத்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இளம் அகவையிலிருந்தே தமிழ் மேலும் தமிழினத்தின் முன்னேற்றத்திலும் ஆராக் காதலுடையவர். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தும் தென்மொழிக்கு உதவுவதில் கர்ணன் ஒரு செல்வராகவே கருதியிருந்தார். ஒரு புரவலரைப்போல் எனக்கு உறுதுணையாயிருந்து உற்ற நேரங்களிலெல்லாம் உதவியவர்.

திரு அரிமா வளங்கோ தம் துணைவியாருடன்.

தம் வீட்டில் 'தென்மொழி'க்கென்று இரண்டு மூன்று உண்டியல்களை வைத்திருந்தார். வருவோர் போவோரிடமெல்லாம் அவற்றில் அன்பளிப்புகளை இடச்செய்வார். கணிசமான ஒரு தொகை சேர்ந்ததும் அதை எடுத்துக் கொண்டு வந்து தென்மொழிக்கு நல்குவார். கிழமைக்கொரு முறை, விடுமுறை நாள்களிலெல்லாம தென்மொழி இல்லத்திற்குத் தமியராகவோ, ஓரிரண்டு மாணவர்கள், அன்பர்கள் தம்முடனேயோ கடலூர் வருவார். மாணவர்கள் பலரைத் தென்மொழிக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை அவருக்குண்டு. சிறப்பாகச் சொன்னால் புதுச்சேரியில் தென்மொழி பரவவும், தனித்தமிழ் உணர்வு கால்கொள்ளவும் காரணமாக இருந்தவரே அவர்தாம்.

எம் இரண்டாவது மருமகனும், சொல்லாய்வறிஞரும் ஆகிய திரு. ப. அருளி அவர்களை (அவர் புதுவைத் தாகூர் கலைக்கல்லூரியில் மாணவராகவும், அடியார்க்குநல்லான் என்ற பெயருடனும் இருந்த பொழுது), அழைத்துக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியவர் அவர். அரிமா மகிழ்கோ என்பவரையும் அப்பொழுது அழைத்துவந்து அறிமுகப்படுத்தியவர். அரிமா மகிழ்கோ இக்கால் புதுவையில் மருத்துவராக உள்ளார். அவரும் சிறந்த தமிழறிவும் அறிவியல் அறிவும் சான்றவர். நல்ல தனித்தமிழ்க் கொள்கையர். அரிமா வளங்கோவும் அரிமா மகிழ்கோவும், ஆசிரியரும் மாணவரும் போல் இருந்து அக்கால் புதுவையில் தமிழ்ப்புரட்சியே செய்தனர் என்று சொன்னாலும் மிகையாகாது. அக்கால் அரிமா மகிழ்கோ சிப்மெர் மருத்துவக் கல்லூரி மாணவராக இருந்து, அக் கல்லூரியின் 1972-ஆம் ஆண்டு மலரை வெளியிடும் பொறுப்பை ஏற்று, அரிமா வளங்கோ துணையுடன் அப்பணியை மிக வெற்றியுடன் செய்து முடித்த பெருமை தனித்தமிழ் இயக்க வரலாற்றில் தனியிடம் பெறத்தக்கது.

அந்த மலர் 'பாவாணர்' சிறப்பு மலராக வெளிவந்தது. ஏறத்தாழ 250 பக்கமுள்ள அம்மலர் போல் இதுவரை எந்தக் கல்லூரி மலரும் வெளிவந்திருக்க முடியாது. அந்த மலருக்காக அரிமா வளங்கோவும் அரிமா மகிழ்கோவும் எடுத்துக் கொண்ட முயற்சியும் உழைப்பும் எவரையும் மலைப்பும் வியப்பும் கொள்ளச் செய்யும். அதில் பயன்படுத்தப் பெற்ற தூயதமிழ் மருத்துவத் துறைச் சொற்களை ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் குழுவும் உருவாக்கி விட முடியாது. திரு அரிமா வளங்கோ, அரிமா மகிழ்கோவுக்கு ஊட்டிய துணிவையும், ஊக்கத்தையும் தனித்தமிழ்ப் பற்றையும் தமிழறிவையும் அம்மலர் வழியாக அனைவரும் உணரலாம். வெறும் தமிழுணர்வும், தமிழினப் பற்றும், தமிழ் வளர்ச்சிக்கும், தமிழின முன்னேற்றத்திற்கும் முழுவதும் உதவிவிட முடியாது. அவ்வகை அறிவு முயற்சிகளும் செயல் திறன்களுமே மிகப் பெருமையானவை! மொத்தத்தில் திரு. அரிமா வளங்கோவைப் போல் தமிழ் வளர்ச்சித் துறைக்கும், தமிழின முன்னேற்றக் களத்திற்கும் செயல் வீரர்கள் கிடைப்பது மிக மிக அரிது.

திரு அரிமா வளங்கோ நம் குடும்பத்திற்கும் மிக நெருங்கியவர். என் துணைவியாரைத் தம் தாயினும் மேலாக மதித்து அன்பும் பாசமும் பொழிபவர். நம் பிள்ளைகள் மேலும் மெய்யன்பும் ஆதரவும் காட்டுபவர் என் துணைவியாரும் அவரை தம் மூத்த மகனாகவே கருதி அன்பு காட்டி வந்தவர்; வருபவர்.

இத்தகைச் சிறப்புக்கும் பெருமைக்கும் உரிய திரு. அரிமா வளங்கோ ஏறத்தாழ பன்னிரண்டுகட்கு முன்னரே, எங்களிடம் சொல்லிக்கொள்ளாமல் பிரான்சு சென்றார். அங்கு மின்கணிப்பான் Computor) துறையை நன்கு பயின்று நல்ல ஒரு பணியில் அமர்ந்து, தம் தூய தமிழுணர்வும் தமிழின முன்னேற்ற உணர்வும் ஒரு சிறிதும் குன்றிவிடாமல், நல்ல நிலையில் இருந்து வருகின்றார். அவர்க்குத் துணைவியாய் வந்து வாய்த்த திலகவாட்டி இசைமொழியும் அனைத்து வகையிலும் அவருக்கு ஏற்ற துணையாய் இருந்து அவருடைய அகவினை புறவினைகளுக்குத் தோள் தருகிறார். ஆறு குழந்தைகள் இப்பொழுது அவருக்கு. மூத்த பெண்ணுக்கு என் பெயரையும் என் துணைவியார் பெயரையும் பின்னிணைப்பாகச் சேர்த்து, 'தென்றி சித்திர தாமரை' என்று பெயரிட்டிருக்கிறார்.

எனவே அவரை நான் பார்த்து 12,13 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். கிழமைக்கு ஒருமுறை தவறாமல் பார்த்துப் பேசிப் பழகி வந்த எனக்கு, அவர் திடுமென இல்லாமற் போனது, 'உள்ளத்துக்குள் பெரியதோர் ஏக்கவுணர்வையும் ஏமாற்றத்தையும் தொடக்கத்தில் தந்திருந்தாலும், படிப்படியாய் அவ்வுணர்வு நீங்கி நின்றுவிட்டது. ஆனால் அவர் பிரான்சு வந்ததும் என் மேல் அவர் வைத்த அன்பும் பாசமும் அறாமல், கொள்கை

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

தனித்தமிழைப் போற்றுதோர் நாலெழுதல்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 29 (25-12-83) பகுதி-1

தமிழ்நாடு, அனைத்துக் கட்சிகளின் அறுவடைக் களமாகி வருகிறது!

தமிழ்நாடு, இங்குள்ள அனைத்துக் கட்சிகளின் அறுவடைக் களமாகி வருகிறது. பருவகாலப் பயிர் அறுவடை போல, தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள், பொதுநலக் கழகங்கள், சாதி இணைப்புகள் தொழில் இயக்கங்கள், திரைப்பட,கலை, பண்பாட்டுக் கழகங்கள், மத அமைப்புகள், செய்தித்தாள் கூட்டங்கள், கீழ்த்தர உணர்வைத் தூண்டி மக்களை உறிஞ்சும் மாத வெளியீடுகள்— முதலிய அனைத்து நிலைகளிலும், தமிழ்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சி, பொருளியல் நலன்கள், தவிமாநத முன்னேற்றங்கள் ஆகியவை கொள்ளையடிக்கப்படுகின்றன.

ஊர்வலங்கள், கூட்டங்கள், பேரணிகள், வரவேற்புகள், வழியனுப்புகள், கூட்டு மத வழிபாடுகள், மாநாடுகள், பிறந்த நாள், மறைவு நாள் நினைவு நிகழ்ச்சிகள், மாரியம்மன், குருவாயூர் அப்பன், ஐயப்பன், மூகாம்பிகை முதலியவற்றின் பெயர்களால் கொண்டாடும் பருவ விழா வேடிக்கைகள், திரைப்பட விழாக்கள், பட்டமளிப்புப் பாராட்டு நிகழ்ச்சிகள் முதலிய ஆரவாரங்கள், தெருக்கள் தோறும், ஊர்கள் தோறும், நாள்தோறும் அளவுக்கு மீறிப் பெருகி நாட்டையே அமர்க்களப்படுத்தி வருகின்றன. நகர்ப்புறங்களில் ஒவ்வொருநாளும் பற்பல பகுதிகளில், பத்துப் பன்னிரண்டு விழாக்கள் நடைபெறுகின்றன. நாள்தோறும் ஏதோ ஒரு காரணம் பற்றி வரவேற்பு வளைவுகள் வகை வகையாக அமைக்கப்படுகின்றன; முன்னாள் அமைத்த அதே வளைவுகள் அடுத்தநாள் பிரிக்கப்பட்டு மீண்டும் அதே இடங்களில் வேறு வேறு வளைவுகள் வேறு வேறு அணியினரால் போட்டி போட்டுக் கொண்டு ஏராளமான பொருட் செலவில் உருவாக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் கட்சிகளின் தகுதி நிலைகளுக்கேற்ப ஆயிரக் கணக்கில், இலக்கக் கணக்கில் பணத்தை வாரியிறைக்கிறார்கள். (அண்மையில் சென்னை நகரில் முன்னாள் திரைப்பட நடி[illegible] ஒருவரின் கூட்டத்திற்கென அவர் சார்ந்த கட்சியினர் ஐந்து இலக்கம் உருபாக்களைச் செலவிட்டுள்ளனர். சிற்றூர்ப் புறத்தில் இத் தொகையைக் கொண்டு ஒரு நல்ல தொழிற் சாலையை அமைத்தால் ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் உயிர்வாழ முடியும்.) இவ்வகையில் மக்களின் முன் தங்கள் தங்கள் கட்சிகளின் ஏற்றங்களைக் காட்டுவதற்கான போட்டிகள் முன்னைக் காட்டிலும் பலநூறு மடங்குகள் அதிகரித்து வருகின்றன. பருவகால மட்டைப் பந்து விளையாட்டுகள் போல், அவ்வப் பொழுது வரும் அன்றாட அரசியல் சிக்கல்களை யொட்டி நிகழ்ச்சிகள் உருமாறி வருகின்றன.

ஒரு கால கட்டத்தில் இந்தியெதிர்ப்புக் கூட்டங்களே நடக்கும் வேறொரு கால கட்டத்தில் தலைவர்கள் பிறந்த நாள், நினைவு நாள் கூட்டங்களே நடக்கும். திருவள்ளுவர், கம்பர், திரு.வி.க, பெரியார், இராசாசி, அண்ணா போன்றவர்களின் பிறந்த நாள் நினைவுநாள் கூட்டங்கள் ஒவ்வொரு பருவ காலத்தில் நடக்கும். (இக்கால் 'தமிழீழச் சிக்கல்' பருவம்! எனவே, நாட்டில் நடைபெறும் கூட்டங்கள் அனைத்தும் அது தொடர்பானவையே! ஒட்டுமொத்த விளைவோ இந்தியெதிர்ப்புக்கு ஏற்பட்ட ஓர் அரைக்காசு விளைவுதான்!) கூட்டங்களுக்கென நாள்தோறும் நன்கொடைகள், வலியுறுத்த வாங்கல்கள், அச்சுறுத்தத் திரட்டல்கள் முதலிய பல வழிகளிலும் ஐந்து, பத்து, ஐம்பது, நூறு, ஆயிரம், பத்தாயிரம் உருபாக்களென பொதுமக்களிடமும் செல்வர்களிடமும் வணிகர்களிடமும், கட்சித் தொண்டர்களைக் கொண்டும், அவ்வவ் வட்டாரங்களில் சாய்கால் பெற்ற அரசியல் குட்டித் தலைவர்களைக் கொண்டும், அதிகாரிகளைக் கொண்டும் பல்லாயிரக் கணக்கில், தொகைகள் திரட்டப்பட்டு வானவாரியாகச் செலவிடப்படுகின்றன.

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?-3

சென்ற இதழில் பொதுத்தொண்டுக்கும் அரசியல் தொண்டுக்கும் உள்ள வேறுபாடுகளையும், அவற்றைச் செய்பவர்களுக்குள்ள வேறு வேறு நோக்கங்களையும் விளக்கமாகக் கண்டோம். அவற்றுடன் புகழ்க்கும் விளம்பரத்திற்கும் உள்ள வேறுபாடுகளும் விளைவுகளும் விளக்கப் பெற்றன.

இனி, உண்மையான பொதுத்தொண்டு அஃதாவது பொதுமக்கள் தொண்டு, அஃதாவது இனத்தொண்டு, அஃதாவது குடிநலம் பேணுதல் அஃதாவது குடிசெயல் வகை எனும் அரிய, சிறந்த, இவ்வுலக வாழ்க்கையிலேயே மிக மேம்பாடும் பெருமையும் கொண்டதான பொதுநலச் செயலைச் செய்பவர்க்குள்ள தகுதிப்பாடுகள் வரையறுத்துக் கூறப்பெறும். இவை தமிழ் நூல்களுக்குள்ளேயே திருக்குறளில் மட்டுமே சொல்லப் பெற்றிருக்கின்றன. வேறெந்த நூலிலும் காண்பது அரிது; மிகவும் அரிது. ஏன் உலக நூல்களில் எங்கேனும் இவ்வளவு சொல்லப் பெற்றிருக்கின்றனவா என்று கூறுவதும் கடினமே! மக்கள் தொண்டு செய்வதே, வேறு எந்தப் பணி செய்வதிலும் பெரியது, பெருமை வாய்ந்தது என்பார் திருவள்ளுவர். எனவே, தமிழின முன்னேற்றம் கருதுபவர்க்குக் குடி செயல் வகை என்னும் அதிகாரத்துள், தகுதி நிலைகளை வரிசைப்படுத்திக் கூறுவார் அவர்களுக்குத் தேவையான பத்து தகுதிநிலைகளும் வருமாறு

1. கைதூவேன் என்னும் பெருமை :

அஃதாவது தேர்ந்து எடுத்துக் கொண்ட ஒரு கொள்கையை எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும் கைநெகிழ்க்காத ஓர் உறுதிப்பாடு: (1021)
— இதில் கொள்கையைக் கை விடுதல் அல்லது கை நெகிழ்த்தல் என்று கூறாமல், கை தூவுதல் என்று புதுச் சொல் படைத்து மிக ஆழமாகக் கூறுவார் பேராசான். ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டவன், காலப்போக்கில் அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் வரும் இடர்பாடுகளையும் இடுக்கண்களையும் பார்த்து, அவற்றைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல், அக் கொள்கையை எவ்வாறேனும் கைவிட்டு விடவேண்டும் என்று கருதிக்கொள்வானும். ஆனால் அப்படி ஒரேயடியாக அதைக் கைவிட்டு விட்டால், அவனின் மன உறுதியற்ற நிலையை மக்கள் எளிதில் விளங்கிக்கொள்வார்கள். அதனால் அவன் மேல் வைத்த நம்பிக்கையை விட்டு விடுவார்கள் என்பதற்காக, ஏதேனும் சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொஞ்சங் கொஞ்சமாகப் பலஇடங்களில் பல காலங்களில் படிப்படியாக, அஃதாவது பொது மக்கள் அவனை ஐயுறாத வண்ணம் கைநெகிழ்த்துக்கொண்டே வந்து, இறுதியில் ஒரேயடியாகக் கைவிட்டு விடுவான். இதைத்தான் கை தூவுதல் என்னும் சொல்லால் புலப்படுத்துகின்றார்.

2. ஆள்வினை, ஆன்றஅறிவு, நீள்வினை : (1022)

அஃதாவது, தம்மால் இயன்ற முழுமையான செயல் திறமும், இயற்கையாய் அமைந்த உலகியல் அறிவும், தொடர்ந்த உழைப்பும்.

— இதில் ஆள்வினை என்பது ஓர் ஆளுக்குள்ள முழுமையான உழைப்புத்திறம். ஆன்ற அறிவு என்பது ஏற்கனவே உயிர்க்கூற்றான் அமைந்த முன்பின் அறியும் உலகியல் அறிவு. அவற்றைக் கொண்டு உழைக்கும் தொடர்ச்சியான, தொய்வில்லாத உழைப்பு.

3. குடிசெய்வல் என்னல் : (1023)

அஃதாவது பொதுத் தொண்டு செய்யப் பெருவிருப்பம். இங்குப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இவ்வுலகியல் தொடர்பான வினைகளுள் ஒவ்வொன்றில் பெருவிருப்பம் உண்டு, சிலர்க்கு ஓவியத்தில் விருப்பம் இருக்கும். சிலர்க்குப் பாடல் எழுதுவதில், இலக்கியத்தில் பெருவிருப்பம் இருக்கும். இன்னுஞ் சிலர்க்குச் சிற்பத்தில் மனம் ஈடுபடும். சிலர்க்கு ஏதாவதொரு தொழிலில், அதிகாரத்தில், பதவியில் இப்படிப் பெருவிருப்பம் இருக்கும். அதேபோலவே பொது மக்களுக்குழைப்பதில் சிலர்க்குப் பெருத்த விருப்பம் இயற்கையாகவே இருக்கும். அதுமுதலில் சிறிய விருப்பமாக-சூழ்நிலையால் அமையும் விருப்பமாக இருக்கும். அவ்வாறு இல்லாமல், உயிர் வேட்கையான பெரு விருப்பமாக இருத்தல் வேண்டும். அத்தகையவர்களே இதில் ஈடுபட வேண்டும் என்பது அவர் கருத்து, அது சிறு விருப்பமாகவோ, சூழ்நிலையால், அஃதாவது பிறர்க்கு வரும் நல்வாய்ப்புகளைப் பார்த்து ஏற்படும் விருப்பமாகவோ இருத்தல் கூடாது. அத்தகையவர்கள் அதில் வரும் துன்பங்களைப் பார்த்து, அவற்றைத் தாங்க மாட்டாதவர்களாய், அதைக் காலத்தால் கை நெகிழ்த்து விட்டுக் கைதூவி விட்டுப் போய் விடுவர் என்று கருதுகிறார். எனவே பெருவிருப்பம் தேவை.

4. தாழாது உஞற்றுதல் : (1024)

— அஃதாவது, காலத்தைத் தாழ்த்தாத, ஊக்கம் இழக்காத முயற்சியுடைமை.

தாழாது — காலத்தைத் தள்ளிப் போடாமல், என்றும் செய்வதற்கு அணியமாயிருக்கும் உணர்வு நிலை.

உஞற்றுதல் — ஊக்கம் இழக்காத முயற்சி. எந்த நிலையிலும் உள்ள உறுதி தளராத உழைப்பு.

5. குற்றம் இன்மை : (1025)

— அஃதாவது, தவறுகள் நேரினும் குற்றங்கள் செய்யாத தன்மை. பொது நிலைகளில் பிறர் மேல் வைத்த நம்பிக்கையாலும், நம்பிக்கையின்மையாலும், ஒருவினையை நன்றாக ஆய்ந்து தேராமலும், தேர்ந்து விடுதலாலும், அறியாமையாலும், ஆசையுள்ளத்தாலும் தவறுகள் செய்து விடுதல். அவ்வாறு ஒரோவொரு கால், செய்து விட்டாலும் மீண்டும் அவ்வாறு செய்யாமல் விடுவது. அப்படிச் செய்து விடுவது குற்றம். ஒருவர் ஒரு கல்லில் ஒருமுறை தடுக்கி விடலாம், ஆனால்; அதே கல்லில் மீண்டும் மீண்டும், தடுக்கி விழுதல் போல் தவறுகள் செய்யாமை.

(தொடரும்)

கணக்குக் கேட்டால் பிணக்குத்தான்! திரைப்படச் சுவரொட்டிகளை விட விழாச் சுவரொட்டிகளுக்குப் பெருத்த தொகைகள் செலவிடப்படுகின்றன. மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படையாகக் கொள்ளையிடப்படுகின்றனர். கட்சிகளும் கழகங்களும் தங்களுக்கென கோடி கோடியாகப் பணத்தைக் குவித்து வருகின்றன. தேர்தல் வந்துவிட்டாலோ, சொல்ல வேண்டியதில்லை; இதனால், மக்கள் தாமே சிந்திக்கும் திறனை இழந்து, ஆடுமாடுகள் போல் குருட்டுத்தனமாகப் பின்பற்றும் திறனைப் பெற்று வருகின்றார்கள். அவர்கள் அறிவூட்டப் பெறுவதற்குப் பகரமாக, அறியாமைச் சேற்றிலும், மதச் சேற்றிலும், கலைக் கழிசடைகளிலும், அரசியல் சாய்க்கடைகளிலும் அழுத்தப்பட்டு வருகிறார்கள். மக்களுக்குத் தேவையான உயர்ந்த குறிக்கோள்களெல்லாம் வருவாய்களுக்குரிய பணம் பறிக்கும் துறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இளைஞர்களுக்குக் கல்வியிலும் நாட்டு நலத்திலும் ஆர்வம் குன்றி, பணம் சம்பாதிக்கும் நோக்கமும், ஆரவார ஆடம்பர வேட்கையும் பெருகி வருகின்றன. தமிழ்நாடு தன்னழிவிலும், தன்தாழ்ச்சியிலும் முன்னேறி வருகிறது. வெற்றுணர்வின் ஆரவாரக் கூட்டங்கள் மிகுந்து வருகின்றன. இந்த நிலை எங்குப்போய் முடியுமோ தெரியவில்லை. அறிஞர்களும் பொதுநலங் கருதும் நல்லுள்ளங்களுந்தாம் ஒன்றுகூடி இதற்கொரு தீர்வுகாண வேண்டும். அம்முயற்சி எங்கு நடக்குமோ, எப்படி நடக்குமோ, யாரால் நடக்குமோ-அதுவும் தெரியவில்லை!

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்(கு) ஒல்கார்
கடனறி காட்சி யவர்: (218)

(பொருள் : வாய்ப்புக் குறைந்த நிலையிலும், மக்கள் பொது நலத்துக்கு உழைப்பதில், மனந்தளர மாட்டார்கள், உலகியலறிவை உணர்ந்து தம் கடமையையும் அறிந்த, தெளிந்த அறிவுடையவர்கள்.)

தமிழ்மொழிக்குக் கேடு செய்யும்!

நம்மை ஓரினப் படுத்திய தலைவர் பெரியார்!

"தமிழா உன் நாட்டை நீ மீண்டும் பெறு! உன் ஆட்சியை நிலைநிறுத்து! நீ அடிமையல்லன்!" - என்று தம் வாழ்க்கையை இனநலத் தொண்டில் செலவழித்த ஒரே வழிகாட்டி பெரியார்!

பிரான்சு பெரியார் விழாவில் பாவலரேறு பேருரை! தொடர்ச்சி-4

இன்னொன்றும் சொல்லுகிறேன். அறிவை இரண்டாகப் பிரிப்பார் திருவள்ளுவர். ஒன்று இருட்டறிவு; ஒன்று ஒளியறிவு! இருட்டறிவு என்ன செய்யும்? மக்களை அடிமைப்படுத்தும்; மக்களை ஏமாற்றும்; மக்களைச் சுரண்டும். கள்ளக் கடத்தல் செய்பவனை அறிவாளி என்று நினைக்காதீர்கள்; மடையன் என்றும் நினைக்காதீர்கள். அவன் ஒரு வகையில் அறிவாளிதான்; காவலர்களை விட அறிவாளி; படைத்துறையினரை விட அறிவாளி! இல்லையானால் எப்படிக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடுவான்! கண்டு பிடிக்க முடியாத அளவுக்குத் திறமையாக எப்படிக் கொள்ளையடிப்பான்? இப்படி நிறையச் சொல்லலாம்.

ஆனால், அதைத்தான் திருவள்ளுவர் சொல்லுவார் "கார்அறிவு" என்று :

"களவுஎன்னும் கார்அறிவு ஆண்மை அளவு என்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்"

ஆனால், ஒளிஅறிவு இருக்கிறதே; இந்த ஒளி என்றைக்கும் இருக்கும் ஒளி. பவேந்தர் சொன்னாரே "மண்டைச் சுரப்பு" என்று; நாம் எடுக்க எடுக்கச் சுரந்து கொண்டேயிருக்கும். பெரியாருடைய ஒரு பெரிய உருவம் போதும்! அவருடைய பட்டாங்கு - மெய்யறிவு (Philosophy) எல்லாம் நமக்குத் தேவையில்லை. அவரைப் பார்த்தாலே தூங்கிக் கொண்டிருந்த தமிழினம் விழித்துக் கொள்ளும். இனித் தூங்காது. படிப்படியாக விழிக்க வேண்டியதுதான்.

அப்படித்தான்: இன்று உலகத்திலே - தமிழ ரெல்லாம் - தமிழர்க்கு ஒரு நாடு தேவை, என்ற நாட்டு உணர்ச்சி ஒன்று தோன்றியிருக்கிறது. அது கட்டாயம் செயற்படுத்தப்பட வேண்டும். அந்த வகையிலே - முதலிலே - ஏராளமான செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். என்ன செய்வது? ஏதோ ஒரு நேரத்திலே சந்திக்கிறோம். அதிலும் வேண்டா வெறுப்பாகச் சந்திக்கிறோம். நமக்குள்ளே பகையை வளர்த்துக் கொண்டு - வைத்துக் கொண்டு - சந்திக்கின்றோம். நமக்குள்ளே வெறுப்பை வளர்த்துக் கொண்டு சந்திக்கின்றோம். அன்பாகச் சந்திக்கிறதில்லை.

திருவள்ளுவர்தாம் சொல்லுவார் - எனக்கு உவமைகளை வேறு எந்த நூலிலேயும் எடுக்க விருப்பமில்லை; ஏனென்றால் எந்த நூலும் உண்மையாக எழுதப்படவில்லை. எல்லாம் இன்பத்திற்காகவும், பெண்ணுக்காகவும், மண்ணுக்காகவும், பொன்னுக்காகவும் எழுதப்பட்ட இலக்கியங்கள்! அது - திருக்குறள் - ஒன்றுதான் அவ்வளவு பெரிய நூல்!

கொஞ்சம் எழுதிவிட்டால் பெரிய எழுத்தில் தன்பெயரைப் போட்டுக் கொள்கிறான். எவ்வளவு ஆசை! விளம்பர ஆசை! கொட்டை கொட்டையாக! திருவள்ளுவருக்குப் பேருமில்லை; ஊருமில்லை . . . சும்மா கதை கட்டுகிறான்! ஆதி என்ற தாய்க்கும், பகவன் என்ற தந்தைக்கும் திருவள்ளுவர் பிறந்ததாக! அதற்கொரு கதை! பகவன் என்றால் பார்ப்பான்; ஆதி என்பவள் பறைச்சி - புலைச்சி இரண்டு பேருக்கும் பிறந்தவர் திருவள்ளுவர் என்று கதை விடுகிறான். புலைச்சிக்கே பிறந்தவர் என்று சொல்லக் கூடாதா?. "அதற்கெதுங்க அவ்வளவு அறிவு; பார்ப்பான் கலந்தால்தான் அறிவு வரும்"

இப்படியெல்லாம் இருந்த ஒரு நிலைபோய் - அந்த அன்போடு பழக வேண்டும் ஐயா (வீரமணி) மீது உண்மையாகவே எனக்கு அன்பு அன்பு இல்லாவிட்டால் தூக்கி எறிந்து விடுவேன் நான்! அவர் எந்தத் தலைவனாக இருந்தாலும் சரி; ஏன்? அவர் - வீரமணி - உழைக்கிறார்! அவர்கள் முன்னாலே நான் இதைச் சொல்லக் கூடாது. தமிழகத்திலே நான் மதிக்கின்ற தலைவர்கள் ஓரிருவர்தாம் இருப்பார்கள்! ஏனென்றால், உண்மையாக மக்களுக்காகத் தங்களை முழுவதுமாக அளித்து விட்டு - ஈகம் செய்தவர்கள்! செய்வது எல்லாம் மக்களுக்கு; பேசுவது எல்லாம் மக்களுக்கு!

நாங்கள் - (பெருஞ்சித்திரனாரும் வீரமணியும்) உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம் கலை என்று காட்டினால், ஒவ்வொரு செயலும் மக்களுக்காக! பரதம், பரத நாட்டியம் எத்தனைச் சொற்கள் வடசொற்கள்! அவனுடையது என்று சொல்கிறான். நம்முடையதை எடுத்து அவனுடையது என்று சொல்கிறான். அப்படிச் சொல்ல விட்டுக் கொண்டுள்ளோம். நாம் அதைப் பின்பற்றக் கூடாது அது பற்றி நான் உங்களுக்கு நிறைய சொல்ல வேண்டுமானால் நிறைய நேரம் வேண்டும். உங்களுக்கு நிறைய தெளிவு உண்டாகும்.

இப்படியெல்லாம் இருக்கும் நிலையில், அன்போடு நாம் பழகத் தவறி விட்டதாலே வேற்றுப் புணர்வுகளோடு பழகியதால் - ஒருவர் ஒருவரை பகைத்துக் கொண்டதனாலே - ஒருவரை ஒருவர் அழிக்க முற்பட்டதனாலே இன்றைக்கு வரைக்கும் அவை தொலைக்கப்படவில்லை.

நம்மை ஓரினப் படுத்திய தலைவர் பெரியார்! அதனாலேதான் உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் ஒரு தலைவருக்கு விழா எடுக்கிறது என்று சொன்னால் - அதுவும் அயலகத்திலே - அதற்குத் தகுதியுடைய தலைவர் இவர் - பெரியார் - ஒருவர்தான்!

இந்த இனத்திற்குக் கண்ணாக நின்று - காதாக இருந்து - உளமாக அமைந்து - அறிவாக நிறைந்து - ஒளிகாட்டி - வழிகாட்டி - உரம் ஊட்டி - திறம் கூட்டி - உண்மையான வீரத்தைப் புகுத்தி - "தமிழா! நீ ஒரு பழம்பெரும் இனத்தைச் சேர்ந்தவன்! அடிமைப் பட்டு விட்டாய்! எழுந்து நில்! உனக்கென்று ஒரு நாடு கேள்! உன்னுடைய நாட்டை நீ மீண்டும் பெறு! உன்னுடைய ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்து! நீ அடிமையல்லன்! ஆரியன் உன்னை அடிமைப் படுத்தினான்!"

"வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்;
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்!
தமிழனே இது கேளாய்!" என்று தட்டி எழுப்பி -

தன்னுடைய நூற்றாண்டு வாழ்க்கையையும் அதிலே செலவிட்ட பெரும் பேரறிஞர்! தலைவன்! வழிகாட்டி! இனநலவேந்தன!

அவர்களிடத்திலே - ஒரு பதினைந்து வரி - நான் மகிழ்ந்து எழுதிய ஓர் உயர்ந்த பாட்டை எடுத்துக் கொண்டு போய் 'ஐயா! உங்களைப் பற்றி ஒரு பாட்டு எழுதிக் கொண்டு வந்துள்ளேன்" என்றேன்! "அப்படியா! படியுங்கள்!" என்று சொன்னார். அதிலே பெரிய புகழ்ச்சியெல்லாம் சொல்லி எழுதியிருந்தேன். "நீங்கள் வேந்தர்க்கு வேந்தர்; ஆனால் உண்மையில் வேந்தராகத்தான் இல்லை! அமைச்சர்க்கு அமைச்சர்! ஆனால் அமைச்சராகத்தான் இல்லை!" . . . இப்படி . . . அப்படி எல்லாம் எழுதியிருந்தேன், படித்த பின்னால் பெரியார் அவர்கள் எழுந்து நின்று, என் கைகளைப் பிடித்துக் கொண்டு அந்த உழைப்பின் கொடுமுடி - அந்த அறிவின் மாமலை "என்னை அளவுக்கு மீறிப் புகழ்ந்திட்டீங்க!" என்று தன்னடக்கத்தைக் காட்டிக் கொண்டது! 'இல்லை ஐயா! உங்களைப்பற்றிக் கொஞ்சமதான் எழுதியிருக்கிறேன்! இன்னும் எழுதுவேன்! என் கை வீணாக ஒரு சொல்லைக்கூட எழுதாது! உண்மையைத் தவிர! நேர்மையைத் தவிர! மக்களுக்குப் பயன்படுவதைத் தவிர! வேறு எதையுமே எழுதாது! நான் நினைத்தால் அம்புலிமாமா கதையைப் போல பத்துக் கதைகளை எழுதி விட முடியும். 'என் மொழி, என் இனம், என் நாடு' நலிகையில் எதனையும் பெரிதென எண்ண மாட்டேன்; வேறு எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்' என்று நூரைத்துக் கொண்டிருக்கும் ஓர் உள்ளம் உங்களை வாழ்த்துகிறது!'! என்று விளக்கினேன்!

அந்தப் பெருமகனுடைய பண்பு எப்படிப் பட்டது? ஒருமுறை திருச்சியிலே அவர்கள் (தந்தை பெரியார்) உள்ளே இருக்கும் போது ஒரு மாணவன் வெளியே காத்திருந்தான்! வெளியில் பலர் இருந்தார்கள். மாணவன் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். சலிப்பு ஏற்பட்டது! கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். ஐயா (பெரியார்) அவர்கள் உள்ளேயிருந்து வெளியே வந்தார்கள். அங்கிருந்த அன்பர்கள் மாணவனிடம் 'ஐயா வருகிறார் தம்பி! காலை எடுங்கள்! காலை எடுத்துக் கீழே போடுங்கள்!" என்று சொன்னார்கள் இது அந்தப் பெருமகனுடைய காதுகளில் விழுந்தது. அந்தப் பண்பின் உச்சி என்ன சொல்லிக் கொண்டு வந்தது தெரியுமா? "ஏன் அவரைக் காலைக் கீழ போடச் சொல்கிறீர்கள்? அவருடைய காலமேலதானே அவர் காலைப் போட்டிருக்கிறார்; வேறு யார் கால் மேலும் போடவில்லையே" என்றார்.

என்ன தன்மான உணர்ச்சி! பகுத்தறிவு உணர்ச்சி! சமநிலை உணர்ச்சி! ஒரு பெரிய தலைவன் - ஒரு சிறிய மாணவன் - அவனுக்கும் உரிமை கொடுக்கின்ற உணர்ச்சி! அதைவிட உரிமை உணர்ச்சியை நமக்குக் கற்றுக் கொடுக்க முடியுமா?

தலைவன் என்று சொன்னால் நாம் போனால் "வாருங்கள்" என்று சொல்ல வேண்டும். "நேரம் இல்லை!" என்றெல்லாம் சொல்லக் கூடாது.

நான் உங்களுக்குச் சொல்கிறேன். என்னுடைய நிலையிலே நான் எந்த எந்த வகையிலே இயங்குகிறேன என்று உங்களுக்கு யாராவது தவறாகச் சொன்னால் நம்பாதீர்கள் நேராக என்னிடத்தில வாருங்கள்! மக்களுக்காக நாம் உழைப்போம!

அந்த நல்ல நினைவுகளை உங்கள் முன் வைத்து - இந்த அரிய விழாவை ஏற்படுத்திக் கொடுத்த என் அன்பு நெஞ்சங்களுக்கு வாழ்த்துகளைக் கூறி - நாங்கள் உங்களையெல்லாம் வந்து பார்ப்பதற்குத் தமிழகத்திலிருந்து வந்தோம். உங்கள் அன்பு நினைவுகளைச் சுமந்து கொண்டு செல்கின்றோம் அந்த நிலைகளிலே நீங்கள் என்றென்றும் எங்களை நினைவில் வைத்திருங்கள். நாங்களும் உங்களை நினைவு வைத்திருப்போம!

இரண்டு அணியினரும் சேர்ந்து இந்தத் தமிழின முன்னேற்றத்திற்காக உழைப்போம்! அப்படி உழைக்கின்ற முயற்சியிலே இந்தப் பெருந் தலைவரின் வழிகாட்டுதல் இருக்கும் என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்! வணக்கம்! 0

அமெரிக்காவும் உருசியாவும்!

0 அமெரிக்கா 18 தன்னதிகாரமுடைய மாநிலங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு.

0 உருசியா பிரிந்து போகும் உரிமையுடைய 16 மாநிலங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு . .

தமிழ் நாட்டைச் சுரண்டும் இனத்தவர்!

தென்னிந்தியர்களையும் குறிப்பாகத் தமிழர்களையும் சுரண்டிக் கொழுக்கும் வடநாட்டு இனத்தவர்கள் :

மார்வாரிகள், பஞ்சாபியர்கள், குசராத்தியர், மூல்தானியர், பனியாக்கள் — முதலியவர்.

தமிழனை வடவன் தாழ்த்தினன் அல்லன்!

தமிழறிஞர் பால்வண்ணனார் அவர்கள் மனந்திறந்து எழுதிய மடல்!

உண்மையானவர்களுக்கு உலகம் மதிப்பளிப்பதில்லை; அவர்களை வளர விடுவதும் இல்லை!

செய்தித்தாள்களைப் பற்றித் தாங்கள் கூறியவை அனைத்தும் உண்மையானவை; சரியானவை!

ஈழத்தமிழர்கள் நிலையினை மிக நன்கு உணர்ந்து அதற்காகவே வாழ்கின்றீர்கள்!

உங்களின் தேவை மிக இன்றியமையாதது!

பாவலரேறு அவர்களுக்குத் தமிழறிஞர் நா. பால்வண்ணனார் அவர்களின் மனம் நெகிழ்ந்த வாழ்த்துகளும் பாராட்டுகளும்!

சென்னை
14-12-83

பெருந்திரு பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தாங்கள் அன்போடு அனுப்பி வரும் 'தமிழ் நிலம்' இதழ்களை இரு கிழமைகளாகப் படித்துப் பார்த்தேன், உள்ளம் உவகையால் மலர்ந்தது. தமிழ் - தமிழினம் - தமிழ்நாடு இவற்றை மீண்டும் உயர்நிலைப் படையச் செய்யத் தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்குத் தமிழ்மண் என்றும் நன்றிக்கடன் ஆற்ற வேண்டியிருக்கிறது.

இந்த எளியவன் 64 ஆண்டுகளாக இந்த உலகில் உடலைச் சுமந்து நிற்கின்றேன். வடலூர் வள்ளல் பெருமானாரின் தனிக் கொள்கைப் பிடிப்புடன் கடந்த 50 ஆண்டுக்காலமாகவே முழுமையாக - தன்நலமற்றும் பணியாற்றி வருகிறேன். சுத்த சன்மார்க்க இயக்கத்தில் இருந்து கொண்டே தலைவர் பெரியார் அவர்களிடம் சேர்ந்து பணி யாற்றியுள்ளேன். வள்ளல் பெருமானாரின் சீர் திருத்தக் கொள்கைகள் தமக்கு வழி காட்டியது எனவும் - வைக்கம் அளித்தன எனவும் அவர் கூறியுள்ளார். வள்ளல் பெருமானார் தமிழ் - தமிழ்மொழி ஆகியவற்றிற்கு எல்லோருக்கும் முன்னால் - சாதி, சமயங்களில் ஈடுபடக் கூடாது என்று கூறி அவற்றைச் சாடியவர்கள் எல்லோருக்கும் முன்னால் குரல் கொடுத்தவர். 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' என்றும் முழக்க மிட்டவர். இவற்றைத் தாங்களும் அறிந்திருப்பீர்கள் என்பதும் என் எண்ணம். ஆனால் இன்று வள்ளல் பெருமானாரை பலர் திசைத் திருப்பி விட்டு அவரை ஒரு 'சாமியார்' ஆக்கி விட்டனர். அறைமாற்றி அவருக்கு எல்லாத்துறைகளிலும் இடம் உண்டு' உலக மக்கள் அனைவருக்கும், எத்த வகையான பேதமுமின்றி தொண்டு செய்த உலகப் பெருந்தொண்டர்; தலைவர். இவற்றை இன்று உலக மறியச் செய்து உலகைப் பொது உணர்வுடையதாக - உலகம் அனைத்தும் ஓர் ஒழுக்கம் உறும் வகையில் - அந்த ஒழுக்கம் தமிழர்களின் ஒப்பற்ற ஒழுக்கமாக - தமிழர் பண்பாடாக இருக்க வேண்டும் என்ற வகையில் செயல்பட வேண்டும் எனத் துடிக்கிறேன்.

தங்களை நான் நன்கு அறிவேன். வெளி நாடுகளுக்குப் பலமுறை சென்றுள்ளேன். மலேசியா சென்றிருந்த போது சிரம்பான் பகுதியில் தங்களைப் பின்பற்றும் பலரை நான் சந்தித்துள்ளேன். அவர்கள் தங்களின் சிறப்புகளை என்னிடம் கூறியவை இன்றும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

தங்களின் தற்போதைய ஐரோப்பியச் சுற்றுச் செலவு பற்றியும், அங்கே அன்பர்களின் ஆர்வமும் - தங்களின் பெருஞ்சிறப்பும் பற்றியும் நன்கு அறிந்தேன்; மகிழ்ந்தேன்.

செய்தித்தாள் தொழிலைப் பற்றித் தாங்கள் எழுதியவை - அங்கே தங்களுடன் பேசிவர்கள் இங்கே எப்படி நடந்து கொண்டனர் - இங்குள்ள செய்தித்தாள்களின் இழிவான தன்மை இவற்றை யும் படித்தேன். உண்மையாகப் பணிபுரிபவர்களை எப்படி நடத்துகின்றனர் - அவர்களின் வாழ்க்கை எப்படியுள்ளது என்றும் தங்களைச் சான்று காட்டி எழுதியிருந்தீர்கள்.

அவை அனைத்தும் உண்மையானவை - சரியானவை என்பதை நான் கற்பனையால் கூற வில்லை. அதே பட்டறிவைப் பெற்றுள்ளவன். எனவே அதனை நான் நன்கு உணர்கிறேன். இந்த உலகில் உண்மையைக் கூறி உண்மையாக வாழ்பவர்களுக்கு உலகம் சரியான மதிப்பைத் தருவதில்லை - அவர்களை வளரவிடுவதில்லை என்பதை நம்மால் பட்டறிவுடன் உணர முடிகிறது.

எனவே ஏறக்குறைய நாம் இருவரும் ஒரே உணர்வு - பட்டறிவு உடையவர்களாக இருப்பதாக நான் உணர்கிறேன். (தவறு இருப்பின் மன்னிக்கவும்)

20. ஆண்டுகளாக 'சுத்த சன்மார்க்கம்' இதழி னை எத்தனையோ இடையூறுகளுக்கும் நடுவில் நடத்திக் கடன்காரனாக 'வறியன்' அடைந்தவன். இந்தப் பட்டறிவு காரணமாக உங்களை நான் நன்கு உணர முடிகிறது.

தமிழ் உலகமாக இந்த உலகை மாற்றும் புனிதப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண் டுள்ளேன். 'சன்மார்க்க இயக்க'த்தவர்கள் இன்று அரசியல் கட்சியினரைப் போலவே வீண்புகழ், போலி நாடகம், தன்னலம் நிரம்பி இருப்பதாலும், சன்மார்க்கத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாக உள்ளதாலும் அவர்களிடம் நான் சரியான தொண்டினை எதிர்பார்க்காமல் தனியாகவே முடிந்ததைச் செய்து வருகிறேன் எனது எண்ணப் படியே - கடமையைச் சரியாகவும் - அஞ்சாமலும் செய்து வருவதையும் - தங்களின் உள்ளக் கருத்து களையும் இரண்டு கிழமைகளில் 'தமிழ் நிலம்' மூலம் அறிந்தேன்; அந்த மகிழ்ச்சியின் காரணமாகவே இந்தக் கடிதம் எழுதுகின்றேன்.

இந்த எளியவன் 'சன்மார்க்க'த்தின் சார் பாகவே - வள்ளல் பெருமானார் கொள்கைகளின் அடிப்படையில் இந்த உலகைத் தமிழ் உலகாக மாற்ற எண்ணுகிறேன் - தாங்களும் இந்த உலகைத் தமிழ்உலகாகமாற்றிட முனைந்து செயல்படுகிறீர்கள். எனவே நாம் ஓரளவாகிலும் சேர்ந்து செயல்படும் செயல்களில் சேர்ந்து செயல்படலாம் என்னும் எண்ணத்துடன் தான் இக்கடிதம் எழுதுகின்றேன்:

புதுவையில் தட்டாஞ் சாவடியில உள்ள தங்கள் இயக்க அன்பர் 'சுரேசனை' நான் பலதடவை சந்தித்துப் பேசிய போது ' தங்கள் கருத்தும் - ஐயா அவர்கள் கருத்தும் பல வழிகளில் ஒத்துள்ளது'' என்று கூறியுள்ளார். எனவே முடிந்ததைச் செய்யா லாம். அதுவும் உண்மையாகச் செய்யலாம் என்பது எனது விருப்பம்.

ஈழத் தமிழர்கள் நிலையினைத் தாங்கள் மிக நன்குக உணர்ந்து அவர்கள் தமிழீழம் தனியாகப் பெற வேண்டிய இன்றியமையாமையை உணர்த்தி அதற்காகவே வாழ்கிறீர்!

உலகத் தமிழர்களின் முன்னேற்றத்திற்காகவே பணிபுரிகிறீர். உங்களின் தேவை எவ்வளவு இன்றி யமையாதது என்பதைத் தங்களின் ஐரோப்பிய சுற்றுச் செலவு உணர்த்தியுள்ளது. வெற்றி முழக்க மிட்டுத் தமிழ்ப்பெரும் வீரராகத் தமிழர்களின் பாது காவலராக வருகை தந்துள்ளீர்கள்: உங்களுக்கு என் பாராட்டுகள் - வாழ்த்துகள்; உலகத் தமிழர் களின் ஒப்பற்றத் தனித் தலைவராகப் பணிபுரிந்து - அவர்களின் ஒற்றுமையும் - தமிழ் வளம் சிறப்பதை யும் - தமிழ் மணம் உலகெங்கும் மணப்பதையும் நீங்கள் மிகவிரைவில் கண்டு மகிழ்வீர்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன். வாழ்க தமிழ்! வாழ்க தமிழர்தம் தனிப்பெருந்தலைவர்! வாழ்க உலகத்தமிழர்.

உண்மையுள்ள,
நா. பால்வண்ணனார்

ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகம் புறக்கணிப்பு!

ஐந்தாண்டுத் திட்டங்களில் நாட்டின் முன்னேற் றத்திற்கென நடுவணரசு மாநிலங்களுக்கு ஒதுக்கிடும் திட்டத் தொகையில் தமிழகம் எவ்வாறு படிப்படி யாகப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது என் பதைக் கீழுள்ள புள்ளி விளக்கம் காட்டும்.

தமிழ் நாட்டு அரசு வெளியிட்ட ஆறுவது பொருளியல் அறிக்கையில் 10-ஆம் பக்கத்தில் இவ் விளக்கம் வந்துள்ளது.

		தமிழ் நாட்டுக்கு ஒதுக்கிய பங்கு.
(1)	முதல் ஐந்தாண்டுத் திட்டம் :	10 8%
(2)	2-ஆவது ,, ,, :	9-0%
(3)	3-ஆவது ,, ,,	7-4%
(4)	1966-இலிருந்து 1969 வரை	6-8%
(5)	4-ஆவது ஐந்தாண்டுத் திட்டம் :	4-7%

நல்ல தமிழ் உள்ளம் ஒன்றின் பொங்கல் அன்பளிப்பு!

கன்னித் தமிழ்க் காவலரே,

கனிந்த வணக்கம். தமிழ், தமிழர், தமிழ்நாடு ஆகியவற்றின் நலனுக்கும் வாழ்வுக்கும் பாடுபட்டு வருகின்ற தாளிகைக்குத் தமிழர் திருநாள் தோறும் உருபா 50/- (உருபா ஐம்பது மட்டும்) நன்கொடை வழங்கல் வேண்டும். என்பது எமது குடும்பக் குறிக்கோள். அதன்படி திருவள்ளுவர் ஆண்டு 2015 சுறவம் (தை) முதல் நாள் (15-1-1984) நிகழும் தமிழர் திருநாளுக்குரிய நன்கொடை உருபா 50/- (உருபா ஐம்பது மட்டும்) 'தமிழ் நிலம்' கிழமை இதழுக்கு வழங்கத் தீர்மானிக்கப் பட்டது.

உருபா 50/- (உருபா ஐம்பது மட்டும்) இதனுடன் இணைத்துள்ளேன். 'தமிழ் நிலம்' இதழில் இச் செய்தியை வெளியிடுவீர்கள் என்று நம்புகின்றேன்.

தமிழர் திருநாள் - தமிழ் ஆண்டு பற்றிய சிறு குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இயலுமா னால் நமது 'தமிழ் நிலம்' இதழில் வெளியிட்டு எனது உண்மைத் தமிழ்த் தொண்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு [illegible]டன் வேண்டு கின்றேன்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் மூன்றும் தொடர்ந்து தொய்வு இல்லாமல் வாங்கிப் படித்து வருகின்றேன். இதை வெளியிட்டாலும் வெளியிடாவிட்டாலும் தொடர்ந்து தாங்கள் தொண்டுக்குத் துணையாக இருப்பேன் என்று உறுதி கூறுகின்றேன். நனி நன்றி. தங்கள் தொண்டன்

வ. வேம்பையன்

தலைவர், பகுத்தறிவாளர் கழகம்,
அமைப்பாளர், கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்,
அணுவாற்றல் நகரியம், கல்பாக்கம்-603102.

தமிழர் திருநாள்

பொங்கல் விழா தமிழகத்தின் தங்க விழா. தமிழை - தமிழ் இனத்தை, தமிழகத்தைத் தாழ்த்தாத என்றும் வீழ்த்தாத விழா. எல்லாத் துறைகளிலும் தமிழ், தமிழர், தமிழ்நாடு எழுச்சியும் ஏற்றமும் பெறுதற்கு உணர்ச்சியும் ஊக்கமும் அளிக்கும் விழா. அதனால் அது தமிழ்த் திருநாள் - தமிழர் திருநாள் அதை ஒரு கிழமை விழாவாகக் கீழ்க் குறிப்பிட்டபடி கொண்டாடல் வேண்டும் என்று தமிழகப் புலவர் குழுவும் தமிழ்நாடு அரசும் முடிவு செய்துள்ளன.

சிலை இறுதி நாள்	:	போகி விழா
சுறவம் . . 1	:	பொங்கல் புத்தாண்டு விழா
சுறவம் . . 2	:	திருவள்ளுவர் விழா
சுறவம் . . 3	:	உழவர் விழா
சுறவம் . . . 4	:	இயல் தமிழ் விழா
சுறவம் . . . 5	:	இசைத் தமிழ் விழா
சுறவம் . . . 6	:	நாடகத் தமிழ் விழா

இவ்வாறே,

தமிழர் திருநாள் கொண்டாடுவோம் - உலகில் தலை நிமிர்ந்து செந்தமிழின் புகழ் பாடுவோம்.

தமிழ் ஆண்டு

தமிழர்க்குத் தமிழில் தொடர் ஆண்டு இல்லாத குறையை உணர்ந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர் கள், புலவர்கள் ஆகியோர் 1921-இல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். திருவள்ளுவர் இயேசு கிறித்துப் பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்றும் அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டாகக் கொள்வது என்றும் முடிவு செய்தார்கள்

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் சுறவம் (தை); இறுதி மாதம் சிலை (மார்கழி). கிழமைகள் வழக்கில் உள்ளவை. புத்தாண்டுத் தொடக்கம் சுறவம் முதல் நாள்

திருவள்ளுவர் ஆண்டு கண்டு பிடிக்க ஆங்கில ஆண்டுடன் 31 கூட்டல் வேண்டும்

$1984 + 31 = 2015$.

15-1-84, சனவரி 15, 1984 என எழுதுவது போல 1 சுறவம், 2015, சுறவம் 1, 2015 எனச் சுருக்கி எழுதலாம்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971-ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

திருவள்ளுவர் ஆண்டு முறையைத் தமிழர் தம் வாழ்வில், வழக்கில் பின்பற்றுமாறு வேண்டு கின்றோம். இங்ஙனம். வ. வேம்பையன்

தமிழனைத் தாழ்த்துவோன் தமிழனே!

ஈரோட்டை' உ.த.மு.க. சார்பில் நடந்த பாவாணர் படிப்பகத் திறப்பு விழாவும் தமிழீழ விடுதலை விளக்கக் கூட்டமும்!

கடந்த 11-12-83 ஆம் நாள், ஈரோடை நகர உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில், காலையில் படிப்பகத் திறப்பு விழாவும், மாலையில் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக் கூட்டமும் நடந்தன.

அன்று காலை 10 மணியளவில், ஈரோடு, சென்னிமலைச் சாலையில் உள்ள சரக்கு வண்டிக் கட்டிட மேல்மாடியில், பாவாணர் படிப்பகம் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன், கட்டட எதிரில் சாலையோரத்தில் உள்ள நிலையான கொடிக் கம்பத்தில் உ.த.மு.க. கொடியைக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஏற்றி வைத்தார். பின் பாவாணர் படிப்பகத் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. இராசமாணிக்கம் தலைமையேற்றார். க.சு. நசீருதீன் பாவலரேற்றுக்குக் கைத்தறியாடை போர்த்தினார். திரு.வ. காளிமுத்து (நகர உ.த.மு.க. தலைவர்) வரவேற்புரையாற்றினார்.

அதன்பின்னர் தலைவர்கள் பாவணர், பாவேந்தர், மறைமலையடிகள், தந்தை செல்வா, திரு.வி.க, திருவள்ளுவர், தந்தை பெரியார் ஆகியோர் படங்கள் திறந்து வைக்கப் பெற்றன. திருவாளர்கள் சு. கணேசன், சேலம் க. எழிலரசன் (நகர உ.த.மு.க. செயலர்.)

தென்மொழி நா. இளமாறன், கோபி-பேராசிரியர். திரு. இரா. அரங்கச் செல்வன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் ஐரோப்பிய சுற்றுச் செலவைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். நிகழ்ச்சி பகல் 12-30 மணியளவில் நிறைவுற்றது. திரு. சேலம் க. எழிலரசன் நன்றியுரை கூறினார். பாவலரேறு தம் சொற்பொழிவுக் கிடையில் பாவாணர் படிப்பக முயற்சியில் பெரும்பங்கு ஆற்றிய ஈரோடை மாவட்ட அமைப்பாளர் பாவேந்தர் அழகண்ணல் (இராமலிங்கம்) அவர்களின் தொண்டுள்ளத்தை பெருவாகப் பாராட்டினார்.

தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக் கூட்டம் :

அன்று மாலையில், ஈரோடு தொலைபேசி நிலையம் அருகில், நகர உ.த.மு.க. தலைவர் திரு வ. காளிமுத்து அவர்கள் தலைமையிலும், திரு. வே.மு. மாசிலாமணி அவர்கள் முன்னிலையிலும் தமிழீழ விடுதலை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னதாக, திருவாளர்கள் பாவலர் சின்னப்பனார், தமிழ்மணி, சநதான கிருட்டிணன், கந்தசாமி (தி.க), பு வி. சண்முகம், தென்மொழி தமிழப்பன், தென்மொழி துரையரசன் (உ.த.மு.க. அமைப்புச் செயலர், தென்மொழி நா. இளமாறன், பல்லடம் மு. ஆறுமுகம், சேலம் எழில் அரசன், க.சு. நசிருதீன் பாவேந்தர் அ. அழகண்ணல் (இராமலிங்கம்) (மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர், சென்னியப்பன் — ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இப்பொழுதுள்ள தமிழீழச் சிக்கலைப் பற்றியும் தமிழீழக் கோரிக்கை தொடர்பாகத் தலைவர்கள், தமிழ்நாடு அரசு, நடுவணரசு ஆகியோரின் நடவடிக்கைகள் பற்றியும் ஏறத்தாழ 2 மணிநேரம் சிறப்புரையாற்றினார்.

இரவு 11-45 மணியளவில் நிகழ்ச்சி சிறப்புற முடிவுற்றது.

புத்தனின் முழு அம்மணம்!

போதி மரத்தின் கீழ்
அன்று ஒருநாள்
மூடிய விழிகளைத்
திறந்தான புத்தன்!

கால்களை நனைத்தது
குருதி ஆறு!
அவனது மெய்ம்மம்
கிடந்து தவித்தது!

அதிர்ந்து,
எழுந்து,
ஓடினான்!

காற்றாய், கடலாய்
திசைகள் தோறும் . . .

எங்கேனும் அவனது மெய்யறிவு
ஒரு துளியாவது . . .

கால்கள் பதிக்க
விரும்பாத மனத்துடன்
உலகை வெறுத்துப்
போதி மரத்தில்
தூக்குப் போட்டுச்
செத்தான் புத்தன்,
முழு அம்மணமாக!

— அம்சதுவனி
நன்றி — 'தமிழ் முரசு'
பாரிசு — நளி — '83

தமிழ் நாட்டுக் கோயில்களில் தமிழில் வழிபடத் தடையேன்?

செருமனியில் செருமன் மொழியிலே ஏசுவை வழிபடுகிறார்கள்.

அரபு நாட்டில் அரபு மொழியிலேதான் வழிபாடு செய்கிறார்கள்.

சீன நாட்டில் சீனமொழியில்தான் புத்த வழிபாடு நடைபெறுகிறது.

பர்மாவில் பர்மிய மொழியில்தான் புத்தரை வழிபடுகிறார்கள்.

போப் ஆண்டவர் 4 மொழிகளில் வழிபாடு செய்கிறார். அவரின் தாய்மொழியோ போலந்து.

ஆப்பிரிக்காவில் 20 வகைப்பட்ட மொழிகள் உள்ளன. அந்த இருபது வகைப்பட்ட மொழிகளிலும் அங்குள்ளவர்கள் வழிபடுகின்றனர்.

மொரிசியசில் பிரஞ்சு மொழி வழக்கில் உள்ளது. இருப்பினும் அங்குள்ள தமிழர்கள் தமிழில்தான் வழிபாடு செய்கிறார்கள்.

— ஆனால் தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் வழிபாடு செய்யத் தடையேன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

பிறந்தநாள் நன்கொடை!

ஈரோடு, குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் திரு.செ. கந்தசாமி, அவர் துணைவியார் திருவாட்டி க. புனிதம் ஆகியோர், தங்கள் மகன் செல்வன். க. இளஞ்சேரல் இரும்பொறையின் 12-1-84 ஆம் நாள் வரும் 8-ஆம் ஆண்டுப் பிறந்த நாளை ஒட்டித் 'தமிழ் நிலம்' வளர்ச்சிக் கென உருபா 20/- (உருபா இருபது)-ஐ நன்கொடையாக அளித்துள்ளார்கள். திருவாளர் கந்தசாமி இணையரின் அருள் உள்ளத்தைப் பாராட்டுவதுடன், செல்வன் க. இளஞ்சேரல் இரும்பொறை நீடு வாழ்கவென 'தமிழ் நிலம்', நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வும் மாறாமல் இருக்கிறார் என்று அறிந்த பொழுது எனக்கு அவர் மேலிருந்த அன்பும் நம்பிக்கையும் இரட்டிப்பாயின. அவரை இத்தனையாண்டுகள் கழித்துப் பார்த்தபொழுது முற்பிறவியில் பிரிந்தார் மறுபிறவியில் கூடும்பொழுது ஏற்படும் உவகை தழைத்தது போன்றதோர் உணர்வு ஏற்பட்டது.

நான் தம்பி, தம்பி, தம்பி என்று அழைத்தவும் அவர் ஐயா, ஐயா, ஐயா என்று கூறிக் கண்ணீர் வடிக்கவும் ஆன அந்நிகழ்ச்சியைச் செழியன் முதலிய மூவரும் பார்த்து, உண்மை அன்பின் — ஆசிரிய மாணவ நிலையின் மெய்ம்மையின் — தன்மையை உணர்ந்து வியந்தனர். அப்படியே என்னை அணைத்தபடியே அருகிலுள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர் துணைவி, பிள்ளைகள், அக்காள் பிள்ளைகள், தம் தமக்கை இறுதியில் தம் நூறு அகவை தாண்டிய தம் தந்தை அனைவரிடமும் கூறி மகிழ்ந்தார். பாரிசு போனபின்னர்தாம் அவர் திருமணம் நடைபெற்றதாகையால் அவரின் தனிக் குடும்பத்தை நான் அப்பொழுதுதான் பார்த்து மகிழ்ந்தேன்.

(தொடரும்)

தனித்தமிழ் இலக்கிய மாநாடு தி.பி. 2015 அறிவிப்பும் வேண்டுகோளும்!

— "தனித்தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?". நூல் உருவாக்கப்பட்டு வருகிறது. மாநாட்டில இந்நூல் வெளியிடப்பெறும். கீழ்க் காணுமாறு தனித்தமிழ் எழுத்தாளர்கள் குறிப்புகளைத் தவறாமல் அனுப்பவும். பெயர், அலுவல் கல்வி, பிறந்த நாள், ஈடுபாடு கொண்ட துறைகள், எழுதியுள்ள நூல்கள், எதிர் காலத் திட்டம், கொள்கை, தனித்தமிழ் இயக்கத்தில் கொண்ட ஈடுபாடு, தெரிந்த மொழிகள், இயன்றால் இவற்றைத் தெரிவிப்பதுடன் ஒளிப்படம் இணைக்கவும் கேட்டுக் கொள்ளப் பெறுகிறது.

தனித்தமிழ் இலக்கிய மாநாட்டில் தனித்தமிழ் நூற்- காட்சியும், அறிஞர் படக்காட்சியும் சிறப்பாக இடம் பெறும். தங்களின நூல்களையும், படங்களையும் பிறருடைய அரிய படைப்புகளையும் அனுப்பி வைக்கவும். அவை பொது நூலகத்தின் தனித்தமிழ்ப் பிரிவில் சேர்க்கப் பெறும் விரும்பினால் உரியவர்களுக்குத் திருப்பித் தரப் பெறும்.

— என, புதுவை, தனித்தமிழ்க் கழகத் தலைவர், திரு. க. தமிழமல்லன் தெரிவிக்கிறார்.

இந்தியப் பெருமை(!)

0 இந்தியாவில் 2909 தொடக்கப் பள்ளிகள் ஆசிரியர்கள் இல்லாமலேயே செயல் பட்டு வருகின்றனவாம்!

0 இந்தியத் தலைமை அமைச்சரின் பாதுகாப்புக்காக மட்டும் நாள் ஒன்றுக்கு உரு 14 ஆயிரம் செலவிடப் படுகிறது.

தமிழகப் பெருமை!

0 தமிழ் நாட்டில் 44 இலக்கம் பேர்கள் குடியிருக்கக் குடிசை கூட இல்லாமல் திறந்த வெளி நடை பாதைகளில் வாழ்கிறார்கள்!

0 தமிழக முதல்வர் ம.கோ.இரா. அவர்கள் மூகாம்பிகை கோயிலுக்கு அடிக்கடி போய் வருகிறார். அவ்வாறு ஒரு முறை போய் வர திருகிறக்கை ஊர்தி (Helicoptor)க்கு மட்டும் 47, ஆயிரம் உருபா செலவாகிறது.

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் தவப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி,
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.